**அலகு : புலவர் போற்றும் புரவலன்**  **இலக்கணம் : சொற்பாகுபாடு**

- பெயர்ச் சொல்
- வினைச் சொல்
- இடைச்சொல்
- உரிச்சொல்

**பின்வரும் வினாக்களுக்குப் பொலுத்தமான விடையைத் தெரிவு செய்க**

1)

(1) இடுகுறிப் பெயர் : மரம், கடல், மண்
(2) காரணப் பெயர் : பறவை, மண்வெட்டி, வளையம்
(3) காரணப் இடுகுறிப் பெயர் : முள்ளி, முக்கண்ணன், நாற்காலி
(4) மரபுப் பெயர் : கன்று, குட்டி, பிள்ளை

2)

(1) ஆக்கப் பெயர் : முதலாளி, பெண்ணியம், காட்சி
(2) கூட்டுப் பெயர் : நீர்வீழ்ச்சி, கடலலை, பொரியல்
(3) தொழிற் பெயர் : பாடுதல், ஆடுதல், போகாமை
(4) வினையாலணையும் பெயர் : வந்தவன், உண்டவன், படித்தவன்

1. பெயர் + விகுதி என்ற அமைப்பைக் கொண்டமைந்த பெயர்
   (1) ஆக்கப் பெயர் (2) கூட்டுப் பெயர்
   (3) தொழிற் பெயர் (4) வினையாலணையும் பெயர்

2. கூட்டுப் பெயர் அமைப்பிற்குப் பொருத்தமற்றது
   (1) பெயர் + பெயர் (2) பெயர் + வினை
   (3) வினை + பெயர் (4) பெயர் + பெயர் + பெயர்

3. எழுதுகோல் என்பது
   (1) ஆக்கப் பெயர் (2) கூட்டுப் பெயர்
   (3) தொழிற் பெயர் (4) வினையாலணையும் பெயர்

4. இரண்டாம் வேற்றுமையின் நீத்தல் பொருளுக்கு எடுத்துக் காட்டாக அமைவது
   (1) இறந்தது மகனா (2) மலையில் வீழ் அருவி
   (3) தசரதன் உயிரைத் துறந்தான் (4) அரசனுடைய முடி

5. பாலோடு கலந்த நீர் என்பது
(1) இரண்டாம் வேற்றுமை
(2) மூன்றாம் வேற்றுமை
(3) நான்காம் வேற்றுமை
(4) ஐந்தாம் வேற்றுமை

6. மாணவர்களுக்கு உரியது கல்வி என்பது நான்காம் வேற்றுமையின் என்ன பொருளில் அமைந்துள்ளது
(1) கொடை (2) பகை (3) உறவு (4) தகுதி

7. தற்கிழமை , பிறிதின்கிழமை என்ற பொருள் கொண்டமைந்த வேற்றுமை
(1) ஐந்தாம் வேற்றுமை
(2) ஆறாம் வேற்றுமை
(3) ஏழாம் வேற்றுமை
(4) ஐந்தாம் வேற்றுமை

8. அறிவுமதியினுடைய வீட்டை நோக்கி நடந்தோம் என்பது
(1) தற்கிழமை (2) நிமிர்த்த காரணம் (3) பிறிதின்கிழமை (4) முதற்காரணம்

9. பின்வருவனவற்றில் தெரிநிலை வினைப்பகுபதம்

(1) பொன்னன் (2) நடந்தான் (3) பெரியன் (4) அறிஞன்

10. உடன்நிலை மெய்ம்மயக்கம் இடம்பெற்ற சொல்

கஞ்சன் (2) தலைவன் (3) கொக்கு (4) தங்கை

11. பின்வருவனவற்றில் கூட்டுப்பெயரடையாக அமைந்தது

அந்தந்த (2) சுவையான (3) விரைவாக (4) எந்தவிதமான

12. ஆறாம் வேற்றுமையின் திரிபின் ஆக்கத் தற்கிழமை இடம்பெற்றது

(1) நெல்லினது பொரி
(2) கண்ணனது கருமை

(3) கோதுமையினது மா
(4) குமரனது நாள்

பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக

**இன்னவைதாம் கவி எழுத**
**ஏற்ற பொருள் என்று – பிறர்**
**சொன்னவற்றை நீர் திரும்பிச்**
**சொல்லாதீர்... சோலை, கடல்**
**மின்னல், முகில், தென்றலினை**
**மறவுங்கள்.. மீந்திருக்கும்**
**இன்னல், உழைப்பு, ஏழ்மை, உயர்வு**
**என்பவற்றைப் பாடுங்கள்**

13. இப்பாடலில் கவிஞர் வலியுறுத்துவது
(1) கவிதை எழுத வேண்டும்
(2) கவிதைக்கு ஏற்ற பொருள் இயற்கை
(3) கவிதைக்கு ஏற்ற பொருள் மக்கள் இயற்கை
(4) புதிய விடயங்களைக் கவிதையில் சேர்க்க வேண்டும்

14. சோலை, கடல் என்பவற்றின் ஒத்த கருத்துக்கள் முறையே
(1) தண்டலை, அகவம்
(2) ஆழி, பொழில்
(3) வனம், சாகரம்
(4) கா, பரவை

15. இன்னல், உழைப்பு, ஏழ்மை, உயர்வு என்பவற்றைப் இங்கு **பாடுங்கள்** என்பது
(1) தனி வினை (2) ஏவல் வினை (3) வியங்கோள் வினை (4) செய்வினை

16. ஓடு மீன் ஓட உறு மீன் வருமளவும் இங்கு இடம்பெற் உரிச் சொல்
(1) ஓடு (2) மீன் (3) ஓட (4) உறு

**பின்வருவனவற்றுக்கு சுருக்கமான விடை தருக**

**பின்வரும் வாக்கியங்களிலுள்ள எழுவாய் பயனிலைகளை இனங்கண்டு எழுதுக**

1. 'அப்பால் மூழ்கிற்று கதிர் நெடுங்கடலுள்'
2. 'மலரின் தேனில் மயங்கின கார்காலக் கருவண்டுகள்'.
3. ' சூரியன் தவிதவிக்கும் நெடுஞ்சாலையோரம் வெயிலை உதறி எறிந்தவாறு நடக்கிறாள் மூதாட்டி'
4. 'கணங்களின் பேராற்றில் மின்னி மறைகின்றன பல்லாயிரம் எண்ணக்குவியல்கள்'
5. மலரின்' தேனில் மயங்கின கார்காலக் கருவண்டுகள்'

**பின்வரும் வாக்கியங்களில் பயின்றுள்ள அணி யாது எனக் குறிப்பிடுக**

1. 'வேட்டை நாய் போலஅவள் முன்னே ஓடிச் செல்கிறது நிழல்'
2. தறி என்ற சொல் பொருள் தரும் வகையில் வாகக்கியங்களில் அமைத்துக் காட்டுக
3. தலையிருக்க வாலாடக் கூடாது என்ற மரபுத்தொடரின் கருத்து யாது

**வினை - செய்வினை – செயற்பாட்டு வினை**

1. "வ.வே.சு.ஐயரால் பாரதியின் கவிதைகளுக்கு விமர்சனம் எழுதப்பட்டது- இதனைச் செய்வினை வாக்கியமாக மாற்றி எழுதுக
2. 'சினிமாவுக்கு கடும் உழைப்பும் பயிற்சியும் அவசியமற்றவை" மேற்படி எதிர்மறை வாக்கியத்தை உடன்பாட்டு வாக்கியமாக்குக